Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான இலவச
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 2 சென்னை | தினசரி | 4 பக்கம் வியாழக்கிழமை, டிசம்பர் 01, 2022 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 140

# பிரதமரின் பாதுகாப்பில் எந்த குறைபாடும் இல்லை: பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலைக்கு டிஜிபி சைலேந்திர பாபு பதில்



சென்னை, டிசம்பர் 01 2022: மத்திய அரசு ஏஜென்சிகள் தமிழ்நாடு அரசுக்கு எந்தவிதமான அறிவுறுத்தலும் வழங்கவில்லை என்பதுடன், சென்னை வந்த பிரதமருக்கு வழங்கிய பாதுகாப்பில் எவ்வித குறைபாடும் இல்லை என்றும் தமிழ்நாடு காவல்துறையில்தான் நவீன பாதுகாப்புக் கருவிகள் உள்ளன என்றும் டிஜிபி சைலேந்திரபாபு இன்று செய்தியாளர் சந்திப்பில் கூறியுள்ளார்.

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியை சந்தித்த பாஜக மாநிலத் தலைவர், தமிழ்நாடு காவல் துறைக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். "செஸ் ஒலிம்பியாட் நிகழ்ச்சிக்காக பிரதமர் நரேந்திர மோடி தமிழ்நாடு வந்தபோது, பாதுகாப்புப் பணியில் பயன்படுத்தப்பட்டிருந்த பல மெட்டல் டிடெக்டர்கள் பழுதடைந்திருந்தன. பிரதமரின் வருகை நிகழ்வு முடிந்தபின்னர், மத்திய அரசின் ஏஜென்சிகள், மாநில அரசுக்கு ஒரு அறிவுறுத்தலை வழங்கியுள்ளது என்று செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியிருந்தார்.

குறைபாடுகளே இல்லை

இந்நிலையில் இதற்கு மறுப்பு தெரிவித்து, தமிழ்நாடு காவல்துறை தலைவர் சைலேந்திரபாபு இன்று சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது கூறியதாவது:ஶ

"பிரதமர் வருகையின்போது, பாதுகாப்பில் குளறுபடிகள் நடந்ததாக எந்தவிதமான தகவலும் இல்லை. நல்ல முறையில் பாதுகாப்பு இருந்தது. அதுதொடர்பாக எந்த தகவல் பரிமாற்றங்களும் கிடையாது. பொதுவாக, ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு காவல்துறை பயன்படுத்தக்கூடிய அனைத்துவிதமான கருவிகளும், பாதுகாப்பு கருவிகள் உள்பட அனைத்தும் என்ன நிலையில் இருக்கின்றன என்பதை ஆய்வு செய்து, ஏதாவது உபகரணங்கள் காலாவதியாகியிருந்தால், அதனை மாற்றும் வழக்கம் பல ஆண்டுகளாக உள்ளது. அதுதான் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல, இப்போது இருப்பதிலேயே தமிழ்நாடு காவல்துறை வசம்தான் நல்ல தரமான உபகரணங்கள் உள்ளன. அதன் அடிப்படையில், தற்போதுகூட, தமிழ்நாடு காவல்துறையின் இரண்டு பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள், மோப்ப நாய்களுடன் அந்தமான் சென்றனர். அங்கு பணி முடிந்து, திரும்ப உள்ளனர். அவர்களைத் திரும்பவும் கேரளாவுக்கு அனுப்ப இருக்கிறோம். இப்படி அண்டை மாநிலங்களுக்கு தமிழ்நாடு காவல்துறை உதவி செய்து கொண்டிருக்கிறது. எனவே அதில் எந்தவிதமான குறைபாடுகளும் இல்லை. பழையனவற்றை மாற்றுவதும், புதியவற்றை வாங்குவதும் காலங்காலமாகச் செய்வது.

2 மடங்கு நவீன கருவிகள்

தமிழ்நாடு காவல்துறையில் பழைய தொழில்நுட்பங்களை எல்லாம் பின்பற்றவில்லை. தமிழ்நாடு காவல்துறையிடம் இருந்து மற்ற மாநிலங்கள் எல்லாம் கேட்டு வாங்குகின்றனர் என்றால், பழைய தொழில்நுட்பம் இருந்தால் வாங்கமாட்டார்கள் அல்லவா? நவீன தொழில்நுட்பக் கருவிகளைத்தான் வைத்திருக்கிறோம். தமிழ்நாடு காவல்துறை வசம் அளவுக்கு அதிகமாகவே உபகரணங்கள் உள்ளன. கிட்டத்தட்ட இரண்டு மடங்கு உபகரணங்கள் உள்ளன.

அதேநேரம் எதை வைத்திருக்க வேண்டும், எதை களைய வேண்டும் என்ற பயிற்சிக்கான நிலையாணை உள்ளது. அந்த நிலையாணையைத்தான் பின்பற்றுகிறோம். மேலும், பிரதமர் வருகையின்போது, பாதுகாப்பு குறைபாடு என்று எஸ்பிஜியிடம் இருந்து எந்தவிதமான தகவலும், குற்றச்சாட்டும் இல்லை. ரொம்ப சிறப்பாக நடந்து முடிந்ததாகத்தான் வாய்மொழியாக அவர்கள் கூறினர் என்றும் தெரிவித்தார்.

# இந்தியா-ஜப்பான் இடையே உறவுகளை மேம்படுத்த உதவிய 3 பேருக்கு ஜப்பான் தூதர் பாராட்டுச் சான்றிதழ்



சென்னை, டிசம்பர் 01 2022: இரண்டு நாட்டு உறவுகளை மேம்படுத்த உதவிய இந்தோஶ்ஜப்பான் தொழில் வர்த்தக சங்க தலைவர் இம்பிச்சம்மது உள்பட 3 பேருக்கு, சென்னையிலுள்ள ஜப்பான் தூதரகம் சார்பில், தூதர் தாகா மாசாயூகி பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார்.

இந்தியா மற்றும் ஜப்பான் இடையே பண்பாடு மற்றும் வர்த்தக பொருளாதார உறவுகள் ஏற்பட்டு 70 ஆண்டுகள் நிறைவையொட்டி, சென்னையிலுள்ள ஜப்பான் தூதரகம் சார்பில் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

3 பேருக்கு பாராட்டு சான்றிதழ்

அதன் ஒரு பகுதியாக, இந்தியா - ஜப்பான் இடையே தொழில் வல்லுநர்களிடையே வர்த்தக உறவுகளை மேம்படுத்தி, இருநாட்டு பொருளாதாரத்திற்கு வளம் சேர்த்த இந்தோ-ஜப்பான் தொழில், வர்த்தக தலைவர் டி.பி. இம்பிச்சம்மது, 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஜப்பான் மொழியை, இங்குள்ள மக்கள் பயில தேர்வுகள் நடத்தி, அதன் மூலம் இரண்டு நாட்டு மக்களிடையே தொழில் உறவையும் பண்பாட்டு உறவையும் மேம்படுத்திய ஏபிகேஶ்ஏஓடிஎஸ் தோசோகாய் தமிழ்நாடு மையத்தின் துணைத் தலைவர் செல்லப்பா சிறீராம் மற்றும் கலை மற்றும் பண்பாட்டு பரிமாற்றம் வழியாக, இரண்டு நாட்டு வர்த்தகத் துறையினரிடையே உறவை ஏற்படுத்தி, தொழில்துறை வளர்ச்சிக்கு உதவிய, காஞ்சிபுரம் நிப்பான் தொழில் வர்த்தக சங்கத்தின் தலைவர் பி. விசுவநாதன் ஆகியோருக்கு ஜப்பான் தூதர் தாகா மாசாயூகி பாராட்டுச் சான்றிதழை வழங்கி பாராட்டினார்.

துணை நிற்க வேண்டும்

தூதர் தாகா மசாயூகி பேசும்போது கூறியதாவது:-

ஜப்பான் - இந்தியா இடையே 70 ஆண்டுகளுக்கும் மேலாக உறவு நீடித்து வருகிறது. இந்த நல்லுறவின் மூலம், இரண்டு நாட்டு மக்களிடையே பண்பாட்டு உறவு மட்டுமின்றி, தொழில், வர்த்தக உறவும் மேம்பட்டுள்ளது. அது இரண்டு நாடுகளில் பொருளாதார நிலைகளில் வெளிப்பட்டு வருகிறது. அதற்கு துணைசெய்து வரும் 3 பெரும் ஆளுமைகளுக்கு ஜப்பான் தூதரகத்தின் சார்பில் பாராட்டுச் சான்றிதழ் வழங்குவதில் பெருமைப்படுகிறோம். அதனை ஏற்றுக்கொண்டு, எங்களை பெருமைப்படுத்திய 3 தொழில் அதிபர்களுக்கும் எங்களது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் இந்த உறவு வலுப்பட துணை நிற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

நிறைவாக, ஏற்புரை ஆற்றிய செல்லப்பா சிறீராம், முதன்முதலாக 1994 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்ப மாணவனாக ஜப்பான் சென்றேன். அதன்பிறகு ஜப்பான் மொழியை கற்று அங்கு பணியாற்றியதுடன், 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஜப்பான் மொழியை இங்குள்ள மக்களுக்கு கற்றுக்கொடுத்து, அதன் மூலம் இருதரப்பு உறவுக்கு உதவி செய்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். பாராட்டு சான்றிதழ் வழங்கி எங்களுடைய பணிகளை ஏற்பளிப்பு செய்த, ஜப்பான் தூதரகத்துக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்றார். இந்த நிகழ்ச்சியில் ஏராளமான தொழில் அதிபர்கள் கலந்துகொண்டனர்.

# தமிழகத்தில் டிசம்பர் 5-ந்தேதி காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு



சென்னை, டிசம்பர் 01 2022: தமிழகத்தில் டிசம்பர் 5-ந்தேதி அந்தமான் கடல் பகுதிகளில் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

கிழக்கு திசை காற்றின் மாறுபாட்டால் தமிழகத்தில் இன்று முதல் 5 நாட்களுக்கு மிதமான மழை பெய்யக்கூடும்.

இன்றும், நாளையும் தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

2ஶந்தேதி முதல் 4-ந்தேதி வரை தமிழக கடலோர மாவட்டங்கள், வடதமிழகம் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னையை பொறுத்தவரை அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். ஒரு சில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும்.

டிசம்பர் 5-ந்தேதி வங்கக்கடலில் அந்தமான் கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளது. மீனவர்களுக்கான எச்சரிக்கை ஏதுமில்லை.

கடந்த 24 மணி நேரத்தில் ஊத்து - 9 செ.மீ., ஸ்ரீவில்லிபுத்தூர் - 7 செ.மீ., கீழ் கோத்தகிரி எஸ்டேட், சிவகிரி, மாஞ்சோலை தலா 6 செ.மீ., பர்லியார், கீழ் கோதையாறு, அடையாமடை, கருப்பாநதி அணை தலா 5 செ.மீ., கடம்பூர், பில்லூர் அணை, அழகரை எஸ்டேட், கயத்தாறு, பாபநாசம், குலசேகரப்பட்டினம், கோழிப்போர்விளை தலா 3 செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

# தமிழகத்தில் 1000 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்ய ரூ.420 கோடி நிதி ஒதுக்கீடு



சென்னை, டிசம்பர் 01 2022: தமிழகத்தில் 1000 புதிய பஸ்கள் கொள்முதல் செய்ய ரூ.420 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மாநகர போக்குவரத்துக் கழகம், விரைவு போக்குவரத்துக் கழகம் தவிர்த்து இதர கோட்டங்களுக்கு சேர்த்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு பஸ் ரூ.42 லட்சம் என்று மதிப்பீடு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

சட்டசபையில் முதலமைச்சர் 110 விதியின் கீழ் அறிவிப்பு வெளியிட்ட நிலையில் தற்போது புதிய பஸ்கள் வாங்குவதற்கான அரசாணையை போக்குவரத்துத்துறை முதன்மை செயலாளர் கோபால் வெளியிட்டுள்ளார். கும்பகோணம் கோட்டத்திற்கு 250 பஸ்கள், மதுரை கோட்டத்திற்கு 220 பஸ்கள், விழுப்புரம் கோட்டத்திற்கு 180 பஸ்கள், கோவை கோட்டத்திற்கு 120 பஸ்கள், நெல்லை கோட்டத்திற்கு 130 பஸ்கள், சேலம் கோட்டத்திற்கு 100 பஸ்கள் என்று மொத்தமாக தமிழகத்தில் 1000 புதிய பஸ்கள் வாங்க ரூ. 420 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# எல்லை தாண்டி வரும் ட்ரோன்களை அழிக்கும் இந்திய ராணுவ பருந்துகள்



சென்னை, டிசம்பர் 01 2022: எல்லை தாண்டி இந்தியப் பகுதிகளுக்கு வரும் எதிரிகளின் ட்ரோன்களை அழிக்க பருந்துகளை இந்திய ராணுவம் பயன்படுத்துகிறது.

பாகிஸ்தான் தரப்பில் இருந்து ஜம்மு காஷ்மீர் மற்றும் பஞ்சாபில் ட்ரோன்கள் மூலம் போதைப் பொருள், துப்பாக்கிகள் மற்றும் ரூபாய் நோட்டுகள் வீசப்படுவது வழக்கமாக உள்ளது.

இந்நிலையில், ராணுவ அதிகாரிகள் கூறும்போது,

"இந்திய ராணுவம் தனது நடவடிக்கைகளுக்கு மோப்ப நாய்களுடன் பயிற்றுவிக்கப்பட்ட பருந்துகளையும் பயன்படுத்தி வருகிறது. பஞ்சாப் மற்றும் ஜம்மு-காஷ்மீரில் எல்லையைத் தாண்டி இந்தியப் பகுதிகளுக்கு வரும் ட்ரோன்களின் அச்சுறுத்தலை சமாளிக்க பாதுகாப்புப் படையினருக்கு இது உதவியாக உள்ளது" என்றனர்.

உத்தரகாண்ட் மாநிலம் அவுலியில் இந்தியா - அமெரிக்கா இடையிலான 18-வது கூட்டு ராணுவப் பயிற்சி கடந்த சனிக்கிழமை தொடங்கியது. இதில் பருந்துகளை பயன்படுத்தி எதிரிகளின் ட்ரோன்களை வீழ்த்துவது எப்படி என்பது குறித்த செயல் விளக்கத்தை இந்திய ராணுவம் அளித்தது. இத்தகைய நோக்கத்துக்கு இந்தப் பறவையை பயன்படுத்துவது இதுவே முதல்முறை என்று ராணுவ அதிகாரிகள் கூறினர். இரு நாடுகளின் ராணுவங்களுக்கு இடையே போர் உத்திகள் மற்றும் நுட்பங்களை பரிமாறிக்கொள்ளும் நோக்கத்துடன் ஆண்டுதோறும் இந்த பயிற்சி நடத்தப்படுகிறது.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# தமிழகத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலத்தினால் மழை பெய்ய வாய்ப்பு: சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்





சென்னை, டிசம்பர் 01 2022: தமிழக - புதுவை கடலோரப் பகுதிகளில் 8-ந்தேதி காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாக வாய்ப்புள்ளதாகவும், தமிழகத்தில் 5 நாட்கள் மழை பெய்யும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு அந்தமான் கடல் பகுதிகளில் 5-ந்தேதி ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும். இது அடுத்த 48 மணி நேரத்தில் மேற்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக தென் கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் வலுவடையக்கூடும். பிறகு மேலும் மேற்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து 8-ந்தேதி தமிழக - புதுவை கடலோரப் பகுதிகளின் அருளில் நிலவக்கூடும்.

கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழகத்தில் இன்று முதல் அடுத்த 5 நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்புள்ளது.

புதுவை, காரைக்கால், உள் தமிழக மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னையில் அடுத்த 2 நாட்களுக்கு வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். ஒரு சில பகுதிகளில் இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

4-ந்தேதி மற்றும் 5ஙீந்தேதி அந்தமான் கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தென் கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 45 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

கடந்த 24 மணி நேரத்தில் கோடியக்கரை - 8 செ.மீ., வேதாரண்யம் - 5 செ.மீ., சிதம்பரம், ஆலங்குடி, மதுக்கூர், மகாபலிபுரம், வம்பன் தலா 3 செ.மீ., தரங்கம்பாடி, புதுக்கோட்டை, சீர்காழி, பட்டுக்கோட்டை, பாடலூர், மலையூர், மணல்மேடு தலா 2 செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

# 2022 பர்கண்டி பிரைவேட் ஹுருன் இந்தியா 500 இல் உள்ள 43 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உள்ளன

சென்னை, டிசம்பர் 01 2022: பர்கண்டி பிரைவேட், ஆக்சிஸ் வங்கியின் பிரைவேட் வங்கி வணிகம் மற்றும் ஹுருன் இந்தியா ஆகியவை இணைந்து '2022 பர்கண்டி பிரைவேட் ஹுருன் இந்தியா 500' அறிமுகம் செய்துள்ளன. இந்தியாவின் மதிப்புமிக்க 500 நிறுவனங்களின் பட்டியலின் இரண்டாவது பதிப்பு இதுவாகும். பட்டியலிடப்பட்ட நிறுவனங்களுக்கான சந்தை மூலதனம் மற்றும் பட்டியலிடப்படாத நிறுவனங்களுக்கான மதிப்பீடுகள் என வரையறுக்கப்பட்ட அவற்றின் மதிப்பின்படி இந்த நிறுவனங்கள் தரவரிசைப்படுத்தப்படுகின்றன. ஹுருன் ரிப்போர்ட் இந்தியா மற்றும் பர்கண்டி பிரைவேட் ஆகியவை 2022 பர்கண்டி பிரைவேட் ஹுருன் இந்தியா 500 பட்டியலில் தமிழ்நாட்டின் மிகவும் மதிப்புமிக்க அரசு அல்லாத நிறுவனங்களின் கூடுதல் பகுப்பாய்வைத் தொடங்கியுள்ளன. இந்தப் பட்டியலுக்கு வருவதற்கான கட்-ஆஃப் தேதி அக்டோபர் 30, 2022. இந்தப் பட்டியல் இந்தியாவில் தலைமையிடமாக உள்ள நிறுவனங்களைக் குறிக்கிறது; அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு மற்றும் இந்திய நிறுவனங்களின் துணை நிறுவனங்கள் சேர்க்கப்படவில்லை.

அறிமுகம் குறித்து ஆக்சிஸ் வங்கியின் நிர்வாக இயக்குநரும், தலைமை செயல் அதிகாரியுமான அமிதாப் சவுத்ரி கருத்து தெரிவிக்கையில் .: "இந்தியாவின் மதிப்புமிக்க 500 நிறுவனங்களைக் கொண்டாடுவதில் ஹுருன் இந்தியாவுடன் மீண்டும் கூட்டு சேர்ந்திருப்பதில் பர்கண்டி பிரைவேட் மகிழ்ச்சியடைகிறது. இந்தியாவின் 500 மதிப்புமிக்க நிறுவனங்களைக் கொண்ட பர்கண்டி பிரைவேட் ஹுருன் இந்தியா 500 அறிக்கையின் 2வது பதிப்பு, இதைவிட சிறந்த நேரத்தில் வந்திருக்க முடியாது. பெரும்பாலான உலகப் பொருளாதாரங்கள் மந்தநிலையை நோக்கிக் கொண்டிருக்கும் ஒரு 'அரிதான பிரகாசமான இடத்தில்' இருந்து, இந்தியா அதன் மேன்மையின் தசாப்தத்தில் நுழையத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்திய நிறுவனங்களும் அவற்றின் தலைமையும் இன்று நாட்டின் தனித்துவமான நிலைப்பாட்டிற்கு அவர்களின் பங்களிப்புக்காக பெரும் பாராட்டுக்கு தகுதியானவை. அடுத்த தசாப்தத்தில் இந்தியாவை உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாற்றுவதில் இன்னும் பெரிய பங்கு வகிக்கிறது."

"உலகளாவிய சவால்கள் இருந்தபோதிலும், 2022 பர்கண்டி பிரைவேட் ஹுருன் இந்தியா 500 பட்டியலில் உள்ள நிறுவனங்கள், தங்கள் பங்குதாரர்களுக்கு 226 லட்சம் கோடி ரூபாய் (யுஎஸ் டி 2.7 டிரில்லியன்) மதிப்பை உருவாக்கியுள்ளன. இந்தியாவாக' செல்வ மேலாண்மையின் முன்னணி உரிமையாளரான பர்கண்டி பிரைவேட் இந்த மதிப்பு உருவாக்கத்தை நெருங்கிய பகுதிகளிலிருந்து கண்டது. இந்த ஆண்டு பட்டியலில் உள்ள நிறுவனங்கள் தேசத்தை கட்டியெழுப்புவதில் பெரும் பங்களிப்பை அளித்துள்ளன. இந்த 500 நிறுவனங்களின் மேல்நிலையானது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 29%க்கு சமமானதாகும், மேலும் இந்த நிறுவனங்கள் நாட்டின் மொத்த பணியாளர்களில் 1.5% வரை வேலை செய்கின்றனர். அந்த அறிக்கையில் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், பட்டியலில் உள்ள 67 நிறுவனங்கள் 10 வயதுக்கு குறைவானவை. இந்த புதிய வயது நிறுவனங்கள் தங்கள் தொழில்முனைவு, தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் கண்டுபிடிப்புகள் மூலம் வரும் பத்தாண்டுகளை வடிவமைக்கும்." என்றார் "ஆக்ஸிஸ் வங்கி இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சி வாய்ப்புகள் குறித்து நம்பிக்கையுடன் உள்ளது. அனைத்து நிதிச் சேவைகளிலும் மாறுபட்ட தீர்வுகளை வழங்கும் முழு-சேவை வங்கியாக 'ஒன் ஆக்ஸிஸ்' வழங்குவதற்கான எங்கள் திறன், எங்கள் தனித்துவத்தின் முக்கிய பகுதியாகும், இது எங்கள் வாடிக்கையாளர்களுக்கு தனித்துவமான தீர்வுகளைக் கொண்டுவர அனுமதிக்கிறது. இந்தியா தனது மிக முக்கியமான தசாப்தத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் வேளையில், 2022 பர்கண்டி பிரைவேட் ஹுருன் இந்தியா 500 பட்டியலில் உள்ள நிறுவனங்களுடன் கூட்டு சேர்வதற்கு நாங்கள் எதிர்நோக்குகிறோம், மேலும் அவை வளர்ச்சிப் பயணத்தில் அடுத்த மைல்கல்லை நோக்கி நகரும்," என்று அவர் மேலும் கூறினார்.

ஹுருன் இந்தியா நிறுவனத்தின் எம்.டி மற்றும் தலைமை ஆராய்ச்சியாளரான அனஸ் ரஹ்மான் ஜுனைட்:"2022 பர்கண்டி பிரைவேட் ஹுருன் இந்தியா 500 ஐ வெளியிட, பர்கண்டி பிரைவேட், ஆக்சிஸ் வங்கியின் தனியார் வங்கி வணிகத்துடன் கூட்டாளியாக இருப்பதில் ஹுருன் இந்தியா மகிழ்ச்சியடைகிறது. தமிழ்நாடு பல்வேறு உற்பத்தித் துறைகளைக் கொண்டுள்ளது மற்றும் ஆட்டோமொபைல், வாகன உதிரிபாகங்கள், பொறியியல், மருந்துகள், ஆடைகள், ஐவுளிப் பொருட்கள், தோல் பொருட்கள், இரசாயனங்கள், பிளாஸ்டிக் போன்ற பல தொழில்களில் முன்னணியில் உள்ளது. அசோக் லேலண்ட், எம்ஆர்எஃப், டிவிஎஸ் மோட்டார்ஸ் போன்ற தமிழ்நாட்டில் உள்ள இந்தியா 500 நிறுவனங்கள், இயக்கத்தை ஜனநாயகப்படுத்துவதிலும், நகர்ப்புற மற்றும் மெட்ரோ இந்தியா இடையேயான இடைவெளியைக் குறைப்பதிலும் மாநிலம் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளது. இந்தியாவில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகள் உட்பட அதிக எண்ணிக்கையிலான தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் உள்ளன. 2030-31 ஆம் ஆண்டிற்குள் விமான இயந்திர பாகங்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை தயாரிப்பதில் பெரும் முதலீடுகளுடன் டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை உருவாக்க அரசு இலக்கு கொண்டுள்ளது." என கூறினார்.

# இந்தியாவின் ஜி-20 தலைமைத்துவம் இந்த பிரபஞ்சம் முழுவதும் ஒன்றே என்னும் உணர்வை மேம்படுத்த பாடுபடும்

## ஜி-20 தலைமைத்துவத்தை இந்தியா இன்று ஏற்கிறது - நரேந்திர மோடி, பிரதமர்



சென்னை, டிசம்பர் 01 2022: ஜி-20-ன் முந்தைய 17 தலைமை நாடுகள் எடுத்த முயற்சிகளால் ஏற்பட்ட விளைவுகளில் மேக்ரோ எக்னாமிக்ஸ் எனப்படும் பருப்பொருளாதாரத்தின் நிலைத்தன்மையை உறுதி செய்தல், சர்வதேச வரிவிதிப்பை முறைப்படுத்துதல், நாடுகள் மீதான கடன் சுமையை தளர்த்துதல் ஆகியவை அடங்கும். இந்த சாதனைகள் மூலம் நாம் பயன்பெறுவோம், இவற்றினால் மீது மேலும் வளர்ச்சியடைவோம்.

இருப்பினும் இந்த முக்கியமான பொறுப்பை இந்தியா ஏற்கும் நிலையில், ஜி-20 மேலும் சிறப்பாக செயல்பட முடியுமா? அடிப்படையான மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தும் கிரியா ஊக்கியாக நாம் செயல்பட்டு ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கும் பயன் அளிக்க முடியுமா? என எனக்கு நானே கேட்டுக் கொள்கிறேன்.

நம்மால் முடியும் என்று நான் நம்புகிறேன்.

நமது சூழ்நிலைகளால் நமது மனப்போக்குகள் வடிவமைக்கப்படுகின்றன. வரலாறு முழுவதும் மனிதகுலம் பற்றாக்குறையில் வாழ்ந்துள்ளது. அளவான ஆதார வளங்களுக்காக நாம் போராடினோம். ஏனெனில் நமது வாழ்வு என்பது அவற்றை மற்றவர்களுக்கு மறுப்பதை சார்ந்திருந்தது. சிந்தனைகள், கோட்பாடுகள், அடையாளங்கள் ஆகியவற்றுக்கு இடையே மோதலும், போட்டியும் இயல்பானதாக மாறியிருந்தது.

துரதிருஷ்டவசமாக அதே மனநிலையில் இன்றும் கூட நாம் சிக்கியிருக்கிறோம். நிலப்பரப்புக்காக அல்லது ஆதார வளங்களுக்காக நாடுகளுக்கு இடையே நடக்கும் போராட்டங்களில் இதை நாம் காண்கிறோம். அத்தியாவசியப் பொருட்களின் விநியோகங்கள் ஆயுதங்களாக மாற்றப்படும்போது இதை நாம் காண்கிறோம். லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டிருக்கும் போது கூட ஒரு சிலர் தடுப்பூசிகளை பதுக்கியதில் இதை நாம் காண்கிறோம். மோதலும், பேராசையும் மனித இயல்பு என்று சிலர் வாதிடலாம். அதை நான் ஏற்கவில்லை. இயல்பாகவே மனிதர்கள் சுயநலக்காரர்கள் என்றால், நாம் அனைவரும் ஒன்று என்ற அடிப்படை சிந்தனை கொண்ட, பல ஆன்மீக பாரம்பரியங்களின் நீடித்த வேண்டுகோளுக்கு என்ன விளக்கம் தர முடியும். இந்தியாவில் பிரபலமாகியுள்ள இத்தகைய பாரம்பரியத்தில், அனைத்து உயிரினங்கள் மற்றும் உயிரற்ற ஜடப்பொருட்களும், நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச தத்துவம் என்னும் 5 அடிப்படை அம்சங்களால் உருவாகியவையாகும். நமக்குள்ளும், நமக்கிடையேயுமான நல்லிணக்கம் மற்றும், இந்த அம்சங்களுடன் இயைந்து செல்வது ஆகியவை நமது ஆரோக்கியம், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் நலன்களுக்கு மிகவும் அவசியமாகும். இந்தியாவின் ஜி-20 தலைமைத்துவம் இந்த பிரபஞ்சம் முழுவதும் ஒன்றே என்னும் உணர்வை மேம்படுத்த பாடுபடும். எனவே, நமது கருப்பொருள் - 'ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்' என்பதாகும்.

இது வெறும் முழக்கம் மட்டுமல்ல. நாம் கூட்டாக மேற்கொள்ளத் தவறிய மனிதச்சூழல்களில், அண்மையில் ஏற்பட்ட மாற்றங்களைக் கருத்தில் கொண்டுள்ளது.

இன்று உலகில் உள்ள அனைத்து மக்களின் அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்ய போதுமான உற்பத்தியை மேற்கொள்ள நம்மிடம் வழிமுறைகள் உள்ளன. இன்று நாம் வாழ்வதற்கு போராட வேண்டிய அவசியம் நமக்கில்லை - நமது யுகத்தில் போருக்கு அவசியமில்லை, உண்மையில் அது தேவையே இல்லாத ஒன்று.

இன்று, பருவநிலை மாற்றம், பயங்கரவாதம், பெருந்தொற்றுகள் என்னும் மிகப் பெரிய சவால்களை நாம் எதிர்கொள்கிறோம். ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டு இந்தப் பிரச்சனைகளுக்கு தீர்வு காணமுடியாது. அதே சமயம், ஒன்றாக செயல்பட்டால் மட்டுமே தீர்வு காணமுடியும். அதிர்ஷ்டவசமாக, இன்றைய தொழில்நுட்பம், மனித குலம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நமக்கு வழிகளை வழங்கியுள்ளது. இன்று நாம் வாழும் மிகப்பெரும் மெய்நிகர் உலகத்தில், டிஜிட்டல் தொழில்நுட்பங்களின் பங்கு முக்கியமாகும். 6-ல் ஒரு பகுதி மனிதர்களைக் கொண்ட, வேறுபட்ட பல மொழிகள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகளை உள்ளடக்கிய இந்தியா உலகத்தின் ஒரு சிறிய வடிவமாகும்.

கூட்டாக முடிவெடுக்கும் பழமையான மரபுகளுடன் ஜனநாயகத்தின் அடித்தளத்திற்கு இந்தியா சிறந்த பங்களிப்பை வழங்குகிறது. ஜனநாயகத்தின் தாயகம் என்ற அடிப்படையில் இந்தியாவின் முடிவுகள் கட்டாயத்தின் அடிப்படையில் அல்லாமல் பலகோடிகணக்கான குரல்களின் நல்லிணக்க சங்கமத்தின் மூலம் அமைகிறது. இன்று இந்தியா மிகவும் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடாக உள்ளது. மக்களை மையமாக கொண்ட நமது ஆட்சி முறை, திறன்மிக்க இளைஞர்களின் படைப்பாற்றல் தன்மையை ஊக்குவிக்கும் அதேவேளையில் மிகவும் விளிம்பு நிலையில் உள்ள மக்களையும் கவனத்தில் கொள்கிறது. தேசிய வளர்ச்சி என்பதை மேல்தட்டு மற்றும் அடித்தட்டு ஆட்சி முறையாக அல்லாமல் மக்கள் தலைமையிலான மக்கள் இயக்கமாக உருவாக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். பொதுமக்களுக்கான டிஜிட்டல் சேவைகள் சிறந்த முறையில் அனைவரையும் உள்ளடக்கி, அனைவருக்கும் இடையே செயல்படக் கூடியதாக அமையும் வகையில் தொழில்நுட்பத்தை ஊக்குவித்துள்ளோம். இது சமூக பாதுகாப்பு, நிதி உள்ளடக்கம், மின்னணு பணப்பரிமாற்றம் உள்ளிட்ட பல துறைகளில் புரட்சிகரமான முன்னேற்றத்தை வழங்கியுள்ளது. இந்த காரணங்களால் இந்தியாவின் அனுபவம் உலகப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணக் கூடிய பார்வைகளை வழங்கும். நமது ஜி-20 தலைமைத்துவத்தின்போது நாம் இந்தியாவின் அனுபவங்கள், கற்றல்கள் மற்றும் மாதிரி செயல்பாடுகளை அனைவருக்கும் வழங்க முடியும், குறிப்பாக வளரும் நாடுகளுக்கு அவற்றை வழங்க இயலும். நமது ஜி-20 முன்னுரிமைகள், ஜி-20 உறுப்பு நாடுகளுடனான ஆலோசனைகளோடு மட்டுமே வடிவமைக்கப்படாமல், இதுவரை இவர்களின் கருத்துக்களை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாத, தென்பகுதி நாடுகளின் ஆலோசனைகளையும் உள்ளடக்கியதாக இருக்கும். ஒரே பூமியை சீர் செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, ஒரே குடும்பம் என்ற நல்லிணக்கத்தை வளர்த்து, ஒரே எதிர்காலம் என்ற நம்பிக்கையை வழங்குவதில் நமது கவனம் திகழும்.

நமது புவிக்கோளை ஆரோக்கியமாக வைத்திருக்க இயற்கையைப் பாதுகாக்கும் இந்திய பாரம்பரியத்தின் அடிப்படையில் நீடிக்கவல்ல மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்க்கை முறைகளை நாம் ஊக்கப்படுத்துவோம்.

மனிதகுலத்திற்கு இடையே இணக்கத்தை மேம்படுத்த உணவு, உரங்கள், மருத்துவப் பொருட்கள் ஆகியவற்றின் உலகளாவிய விநியோகத்தை அரசியல்மாக்கலிருந்து விடுவிக்க நாம் முயற்சிகளை மேற்கொள்வோம். இது புவி - அரசியல் பதற்றங்கள், மனிதாபிமான நெருக்கடிக்கு வழிவகுக்காமல் இருக்கும். நமது சொந்தக் குடும்பங்களில் கூட அதிகபட்ச கவனம் தேவைப்படுபவர்களுக்கு எப்போதும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இது உலகளவிலும் பொருந்தும். நமது எதிர்கால தலைமுறைகளுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த, பேரழிவை உண்டாக்கும் ஆயுதங்களால் ஏற்படும் அபாயங்களை குறைக்கவும் உலகளாவிய பாதுகாப்பை விரிவுபடுத்தவும் மிகவும் சக்தி மிக்க நாடுகளுடன் நேர்மையான உரையாடலை நாம் ஊக்குவிப்போம்.

இந்தியாவின் ஜி-20-ன் மையப்பொருள் என்பது அனைவரையும் உட்படுத்தியதாக, லட்சியமிக்கதாக, செயல்பாடுகள் சார்ந்ததாக, உறுதியானதாக இருக்கும். புனரமைத்தல், நல்லிணக்கம் மற்றும் நம்பிக்கையின் தலைமையாக இந்தியாவின் ஜி-20 தலைமையை உருவாக்க நாம் அனைவரும் ஒருங்கிணைவோம்.

மனிதநேயத்தை மையமாக கொண்ட உலகம் என்ற புதிய முன்னுதாரணத்தை வடிவமைக்க நாம் அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபடுவோம்.

# 11 குற்றவாளிகள் விடுதலையை எதிர்த்து தலைமை நீதிபதி அமர்வில் பில்கிஸ் பானு முறையீடு: உச்சநீதிமன்றத்தில் விரைவில் விசாரணை..!



சென்னை, டிசம்பர் 01 2022: குஜராத் கலவரத்தின் போது கூட்டு பாலியல் பலாத்காரம் மற்றும் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற 11 பேர் முன்கூட்டியே விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்து பில்கிஸ் பானோ உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ளார். குஜராத்தில் 2002ம் ஆண்டு நடந்த கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தை தொடர்ந்த நடந்த வன்முறையில் பில்கிஸ் பானு என்ற 5 மாத கர்ப்பிணி கூட்டு பலாத்காரம் செய்யப்பட்டார்.

அவரது 3 வயது மகள் உட்பட குடும்பத்தினர் 7 பேர் வன்முறை கும்பலால் கொல்லப்பட்டனர். இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட 11 பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இந்நிலையில், 75வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு கடந்த 15ம் தேதி இந்த 11 பேரையும் பொது மன்னிப்பு வழங்கி குஜராத் அரசு விடுதலை செய்தது. குற்றவாளிகள் 14 ஆண்டு சிறை தண்டனை நிறைவு செய்ததால் விடுதலை குறித்து குஜராத் மாநில அரசு ஒரு குழுவை அமைத்து 11 பேர் விடுதலை குறித்து முடிவெடுக்கலாம் என்று உச்சநீதிமன்றம் கூறியது. இதனை அடுத்து 10 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

குழுவினர் அனைவரும் ஒருமனதாக குற்றவாளிகளை விடுதலை செய்யலாம் என்று தெரிவித்தனர். இதனை தொடர்ந்து 11 பேரும் விடுதலை செய்யப்பட்டனர். விடுதலைக்கு மூலகாரணமாக அமைந்தது குஜராத் அரசே முடிவெடுக்கலாம் என்று உச்சநீதிமன்றம் கூறியது தான். எனவே உச்சநீதிமன்றத்தின் இந்த உத்தரவு சீராய்வு செய்யப்பட வேண்டும் என்று பில்கிஸ் பானு தனது மனுவில் கூறியுள்ளார். இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# எம்.ஜி.ஆர்' படங்களை முதல் ஆளாக டிக்கெட் வாங்கி பார்ப்பேன் - முதல்வர் மு.க.ஸ்டாலின்



சென்னை, டிசம்பர் 01 2022: எம்.ஜி.ஆர் ஜானகி கல்லூரி வளாகத்தில் திருவள்ளுவர் சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். பொன்மனச் செம்மல் எம்ஜிஆர் எனும் நுழையும் வெளியிட்டார். பின்னர் பேசிய முதல்வர்; எம்ஜிஆர் அதிமுகவை விட திமுகவில் தான் அதிக காலம் இருந்தார். 1952 முதல் 1972 வரை திமுகவில் எம்ஜிஆர் இருந்தார். 1972க்கு பிறகு தான் அதிமுகவை தொடங்கினார். தனிக்கட்சி கண்டாலும் எம்.ஜி.ஆர். அண்ணாவின் கொள்கையாளர் ஆகவே இருந்தார். தமிழகத்தின் முதல் பெண் முதலமைச்சர் ஜானகி. ஜானகி எம்.ஜி.ஆர் நூற்றாண்டு துவக்கவிழா நடத்துவது சிலருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தலாம்.

உடல் வலிமை போன்று மனவலிமையும் முக்கியம். டாக்டர் எம்ஜிஆர் ஜானகி கல்லூரி உருவாக்க துணையாக இருந்தவர் கலைஞர். எம்ஜிஆர் உடன் நெருங்கி பழகும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. எம்ஜிஆர் படம் வெளியாகும் போது முதல் நபராக பார்ப்பேன். என் மீது அளவு கடந்து பாசத்தையும், அன்பையும் கொண்டவர் எம்ஜிஆர். என் மீது மட்டுமல்ல, என் குடும்பத்தினர் மீதும் மிகுந்த பாசம் கொண்டவர் எம்ஜிஆர். நல்லா படி என்று அறிவுரை சொல்லி, கலைஞருக்கு கிடைக்காத கல்வி, உனக்கு கிடைக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கி, உன் பெரியப்பா என்ற முறையில் இதை சொல்கிறேன் என்று எம்.ஜி.ஆர் எனக்கு அறிவுரை சொன்னார்.

எம்.ஜி.ஆர் மற்றும் ஜானகி ஆகியோர் நடித்த 'மருதநாட்டு இளவரசி' படத்துக்கு கதைவசனம் எழுதியவர் முத்தமிழறிஞர் கலைஞர். தமிழ்நாட்டின் மூன்று முதலமைச்சர்கள் பங்கெடுத்த பெருமைக்குரிய படம் 'மருதநாட்டு இளவரசி. தேசிய இயக்கத்தில் இருந்த எம்ஜிஆரை, திமுகவிற்கு அழைத்து வந்தவர் கருணாநிதி. "சைகை மொழியை பள்ளி, கல்லூரிகளில் பாடமாக்க வேண்டும்; செவி, பேச்சுக்குறைபாடு மாற்றுத்திறனாளி மாணவர்களுக்காகச் சிறப்பு ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருக்கிறார்கள்; நிச்சயமாக நிறைவேற்றப்படும் இவ்வாறு கூறினார்.

# ஜல்லிக்கட்டு போட்டியை காண்பதற்கு எங்களை அழைக்க மாட்டீர்களா? - சுப்ரீம் கோர்ட் நீதிபதி ரிஷிகேஷ் ராய்

சென்னை, டிசம்பர் 01 2022: ஜல்லிக்கட்டு போட்டியை பார்க்க வருமாறு சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளுக்கு தமிழக அரசு அழைப்பு விடுத்துள்ளது.

பொங்கல் பண்டிகையொட்டி அடுத்த மாதம் (ஜனவரி) மதுரை அலங்காநல்லூர் உள்பட பல்வேறு இடங்களில் ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற உள்ளது.

ஜல்லிக்கட்டு போட்டி நடத்த 2014ல் உச்ச நீதிமன்றம் தடை விதித்த நிலையில், தமிழக அரசு அவசர சட்டம் இயற்றி 2017 முதல் போட்டியை நடத்தி வருகிறது. இந்த ஜல்லிக்கட்டு அனுமதிக்கு எதிராக பீட்டா என்ற அமைப்பு சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தது.

சுப்ரீம் கோர்ட்டில் ஜல்லிக்கட்டு தொடர்பான வழக்கு விசாரணை 4-வது நாளாக இன்று நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற விசாரணையின் போது ஜல்லிக்கட்டு போட்டியில் தற்போது எந்த விதிமீறலும் நடைபெறுவதாக தெரியவில்லை என்றும் ஜல்லிக்கட்டு விவகாரத்தில் விதிகளை அமல்படுத்த வேண்டும் என்பதே முக்கியமே தவிர, ஜல்லிக்கட்டு நடைமுறையை மாற்ற வேண்டும் என்பது அல்ல என்று நீதிபதிகள் கூறினார்கள்.

இன்று இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்த போது, 2017ம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஜல்லிக்கட்டு விதிமுறைகள் குறித்தும், ஜல்லிக்கட்டு போட்டி நடைபெறுவது எப்படி என்ற விவரங்கள் குறித்தும் தமிழக அரசிடம் சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் சரமாரியாக கேள்விகளை எழுப்பியுள்ளனர்.

குறிப்பாக ஜல்லிக்கட்டு போட்டியில் காளைகள் 15 மீட்டர் தூரம் மட்டுமே ஓட வேண்டும் என விதிமுறைகள் உள்ளன. காளைகள் எப்படி 15 மீட்டர் தூரம் மட்டும் ஓட முடியும்? வீரர்கள் அனைவரும் காளையை தொட அனுமதி உள்ளதா? காளைகள் வெளியேற ஒதுக்கப்பட்ட 100 மீட்டர் தூரத்தில் காளைகள் எப்படி ஓடி வெளியேறுகின்றன? காளைகள் அடைத்து வைக்கப்பட்டுள்ள இடம், சென்று சேருமிடம் தவிர ஜல்லிக்கட்டு நடைபெறும் இடத்தில் சி.சி.டி.வி. கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளனவா?" என பல்வேறு கேள்விகளை நீதிபதிகள் முன்வைத்தனர்.

இதையடுத்து தமிழக அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞர், ஜல்லிக்கட்டு போட்டியின்போது தகுதியுடைய ஒரு வீரர் மட்டுமே ஒரு நேரத்தில் காளையை தொட முடியும். இருபுறமும் தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், ஜல்லிக்கட்டு நடைபெறும் இடத்தில் அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணிக்க சி.சி.டி.வி. கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

காளைகள் ஒன்றரை ஆண்டு முதல் 6 வயது வரை ஜல்லிக்கட்டில் பங்கேற்கும். உடற்தகுதி, தோற்றத்தை வைத்தே காளை வாங்கப்படுகிறது. தேவைப்பட்டால் நீதிபதிகளின் கேள்விகள் தொடர்பாக விரிவான பிரமாண பத்திரம் தாக்கல் செய்ய தயாராக உள்ளதாகவும், தமிழக அரசு எதையும் மறைக்க விரும்பவில்லை என்றும் தெரிவித்தார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதி ரிஷிகேஷ் ராய், ஜல்லிக்கட்டு போட்டியை காண்பதற்கு இந்த சுப்ரீம் கோர்ட்டின் அரசியல் சாசன அமர்வு நீதிபதிகளை அழைக்க மாட்டீர்களா? என்று கேட்டார். அதற்கு 'நீதிபதிகளை அழைப்பதில் எங்களுக்கு மிக்க மகிழ்ச்சி' என்று தமிழக அரசு தரப்பு வழக்கறிஞர் கூறினார்.

# வடபழநி ஃபோர்டிஸ் மருத்துவமனையில் நடைபெற்ற அதிக அபாய இதய அறுவை சிகிச்சை 68 வயது விவசாயியின் உயிரைக் காப்பாற்றியது



சென்னை, டிசம்பர் 01 2022: சென்னை வடபழநி ஃபோர்டிஸ் மருத்துவமனையில் நடைபெற்ற சவாலான ரீடு தையலற்ற பெருந்தமனி தடுக்கிதழ் மாற்று அறுவை சிகிச்சைக்குப் பின் 68 வயது விவசாயிக்கு புத்துயிர் கிடைத்தது. கால்சியம் படிந்த பெருந்தமனி தடுக்கிதழ் காரணமாகக், கடுமைமையான பெருந்தமனி இரத்த நாளக் குறுக்கம் (இதயத்திலிருந்து பெருந்தமனி மற்றும் உடலின் ஏனைய பாகங்களுக்குச் செல்லும் இரத்த ஓட்ட பாதிப்பு) ஏற்பட்டதால், இவர் ஏற்கனவே 2007ஆம் ஆண்டு பெருந்தமனி தடுக்கிதழ் மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டார். நோயாளியின் உயிரைக் காப்பாற்ற அறுவை சிகிச்சை மூலம் இவருக்கு உயிரி செயற்கைத் தடுக்கிதழ் பொருத்தப்பட்டது. காலப்போக்கில், கால்ஷியம் அதிகம் சேர்ந்ததால் தடுக்கிதழ் சிதைந்து குறுகியதால், உடனடி சிகிச்சை அளிக்காவிட்டால் உயிருக்கு ஆபத்து என்ற நிலை ஏற்பட்டது. நோயாளி மூச்சு விடச் சிரமப்படவே, 2022 நவம்பரில், சென்னை வடபழநி ஃபோர்டிஸ் மருத்துவமனையின் இதயம் & நுரையீரல் மாற்றும் அறுவை சிகிச்சை பிரிவு தலைவர் - சிடிவிஎஸ் டாக்டர் கோவினி பாலசுப்பிரமணியின் கண்காணிப்பில் அனுமதிக்கப்பட்டார். பரிசோதனையில், காரை படிந்த பெருந்தமனி இரத்த நாளக் குறுக்கம் மற்றும் இதயத்தின் பெருந்தமனி தடுக்கிதழ் இறுக்கமாக மூடிக் கொள்ளாமை ஆகியவை உறுதி செய்யப்பட்டன. இதன் காரணமசக இதயத்தின் இடது கீழறையிலிருந்து ஏற்றப்பட்ட குருதி பின்னோக்கிக் கசியத் தொடங்கியது. அறுவை சிகிச்சை விவரங்களை டாக்டர் கோவினி விளக்குகையில் 'நோயாளிக்கான பல்வேறு சிகிச்சை வாய்ப்புகளை ஆய்வு செய்தோம். டிஏவிஐ (செருகு வடிகுழாய் பெருந்தமனி தடுக்கிதழ் மாற்று அறுவை சிகிச்சை அதாவது சிதைந்த தடுக்கிதழை அகற்றாமல் அதற்குள்ளேயே புதிய தடுக்கிதழைச் சொருகும்) அறுவை சிகிச்சையும் பரிசீலிக்கப்பட்டது. டிரான்ஸ் ஈஸோஃபேகியல் எக்கோ பரிசோதனையின் போது மருத்துவர் குழு இன்னொரு சவாலைச் சந்தித்தது. இயல்பான நிலையில் 21மிமி இருக்க வேண்டிய நோயாளியின் பெருந்தமனி தடுக்கிதழ் 20மிமிக்கும் குறைவாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. விரிவடையும் போது பெருந்தமனி தடுக்கிதழ் உறுதி பலவீனமோ, சேதமோ ஏற்படும் அபாயம் நிகழலாம். எனவே அபாயம் அடையும் சாத்தியங்கள் அனைத்தையும் கருத்தில் கொண்டு ரெடோ தையலற்ற பெருந்தமனி தடுக்கிதழ் மாற்று அறுவை சிகிச்சை அளிக்க முடிவு செய்தோம்' என்றார்.

டாக்டர் கோவினி மேலும் தொடர்கையில் 'சேதமடைந்த தடுக்கிதழை அகற்ற ஸ்டெர்னோடொமி அறுவை சிகிச்சை மூலம் நோயாளியின் மார்பக எலும்பு பிரிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட தடுக்கிதழுக்குப் பதிலாக 21மிமி உயிரி செயற்கை / தையலற்ற தடுக்கிதழ் பொருத்தப்பட்டது. புதிய தடுக்கிதழைப் பொருத்தித் தைக்க வேண்டியதில்லை என்பதாலும், அறுவை சிகிச்சை அதிக சிக்கலில்லை என்பதாலும், குணமடையும் காலம் விரைவு என்பதாலும், வயதான அல்லது கூட்டு நோய்கள் உள்ள நோயாளிகளுக்குத் தையலற்ற தடுக்கிதழ் மாற்று அறுவை சிகிச்சை பரிந்துரைக்கப்படும். தையலற்ற தடுக்கிதழ் பொருத்த 3 நிமிடங்களுக்கும் குறைவான நேரமே தேவைப்படும். குருதி மாற்றம், சிறுநீரகக் கோளாறு, மார்பக மேலறை நுண்ணார்ச் சுருக்க நடுக்கம், நீண்ட காலம் செயற்கைச் சுவாஸத்தில் வைத்திருத்தல் உள்ளிட்ட அறுவை சிகிச்சைக்குப் பிந்திய சிக்கலகள் கணிசமாக குறையும். அறுவை சிகிச்சைக்குப் பிறகு நோயாளி படிப்படியாக நன்கு குணமடைந்தார்' என்றார்.

சென்னை ஃபோர்டிஸ் மருத்துவமனை எஸ்பியூ தலைவர் வேங்கட பணீதர் நெல்லுரி பேசுகையில் 'நோயாளியின் மருத்துவ நிலை மற்றும் வயதைக் கருத்தில் கொள்கையில், இந்த அறுவை சிகிச்சை உண்மையிலேயே சவசலானதுதான். இருப்பினும், உரிய நேரத்தில் நோயாளியை எங்கள் நிபுணர் குழு பரிசோதித்துத் தேவையான சிகிச்சையை வழங்கியதால் அவருக்குப் புதிய வாழ்க்கை கிடைத்தது. நோயாளி விரைவில் குணமடைய உதவிய டாக்டர் கோவினி பாலசுப்பிரமணி மற்றும் அவாது இதய அறுவை சிகிச்சைக் குழு நிபுணர்கள், ஐசியு நிபுணர்கள், இதய மயக்க மருந்து நிபுணர்கள், செவிலியர்கள் ஆகியோர் குறித்து நாங்கள் பெருமைப்படுவதுடன், அனைவருக்கும் மனதார நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்' என்றார்.

# விஸ்தாரா ஏர்லைன்ஸ், ஏர் இந்தியாவுடன் இணைக்க டாடா குழுமம் நடவடிக்கை




சென்னை, டிசம்பர் 01 2022: பொதுத்துறை விமான நிறுவனமாக இருந்த ஏர் இந்தியாவை கடந்த ஜனவரி மாதம் டாடா குழுமம் விலைக்கு வாங்கியது. விஸ்தாரா ஏர்லைன்ஸ் நிறுவனத்தில் டாடா குழுமம் 51 சதவீத பங்குகளை வைத்துள்ளது. மீதி பங்குகளை சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனம் வைத்துள்ளது.

இந்தநிலையில், ஏர் இந்தியாவுடன் விஸ்தாராவை இணைக்கப்போவதாக டாடா குழுமம் நேற்று அதிகாரபூர்வமாக அறிவித்தது. அரசு அமைப்புகளின் ஒப்புதலை பொறுத்து, 2024ம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் இணைப்பு பணி முடிவடையும்.

இணைப்பு ஒப்பந்தத்தின்படி, ஏர் இந்தியாவில் சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் ரூ.2 ஆயிரத்து 58 கோடி முதலீடு செய்கிறது. அதற்கேற்ப விரிவாக்கம் செய்யப்பட்ட ஏர் இந்தியாவில் சிங்கப்பூர் ஏர்லைன்சுக்கு 25.1 சதவீத பங்குகள் அளிக்கப்படும்.

இணைப்பை தொடர்ந்து, 218 விமானங்களுடன் நாட்டின் முன்னணி உள்நாட்டு, சர்வதேச விமான நிறுவனமாக ஏர் இந்தியா திகழும் என்று டாடா குழும தலைவர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

# ஐசிஐசிஐ வங்கி, ரியல் எஸ்டேட் துறையில் உள்ள நிறுவனங்களுக்காக ஸ்டாக் - ஐ அறிமுகப்படுத்துகிறது

சென்னை, டிசம்பர் 01 2022: ஐசிஐசிஐ வங்கி, ரியல் எஸ்டேட் துறையில் உள்ள நிறுவனங்களுக்கு ஒரே தளத்தில் தங்கள் வங்கித் தேவைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்காக ஸ்டேக் ஐ அறிமுகப்படுத்துவதாக இன்று அறிவித்துள்ளது. டிஜிட்டல் மற்றும் பைஜிட்டல் தீர்வுகளின் கலவையான இந்த ஸ்டேக்,, கட்டுமான நிறுவனங்கள், ரியல் எஸ்டேட் இன்வெஸ்ட்மென்ட் ட்ரஸ்ட்கள் (ஆர் ஈ ஐ டிகள்) மற்றும் ஆல்ட்டர்நேட்டிவ் இன்வெஸ்ட்மென்ட் பண்ட்கள் (ஏ ஐ எஃப்கள்) போன்ற ரியல் எஸ்டேட் துறையில் பங்கேற்பாளர்கள், வங்கி பரிவர்த்தனைகளை விரைவாக மேற்கொள்ள உதவுகிறது. இந்த முன்முயற்சியானது கார்ப்பரேட்டுகள் மற்றும் அவர்களின் ஒட்டுமொத்த சூழல் அமைப்புகளுக்கு தனிப்பயனாக்கப்பட்ட வங்கி தீர்வுகளை வழங்குவதற்காக வங்கி கடந்த ஆண்டு அறிமுகப்படுத்திய 'கார்ப்பரேட்களுக்கான ஐசிஐசிஐ ஸ்டாக்' இன் நீட்டிப்பாகும்.

இதன் வகையின் முதல் முயற்சியானது, பில்டர்களுக்கு, வங்கிக் கணக்குகளின் டிஜிட்டல் திறப்பு, ரெரா பதிவுக்கான கணக்கு எண் உடனடி உருவாக்கம், கட்டுமான நிதி, சரக்கு நிதி மற்றும் குத்தகை வாடகை தள்ளுபடி போன்ற தீர்வுகளை ஒரு திட்டத்தின் காலகட்ட நிலையைப் பொறுத்து வழங்குகிறது. கூடுதலாக, விற்பனையாளர்கள், பணியாளர்கள், பயன்பாட்டு வழங்குநர்கள் மற்றும் சட்டப்பூர்வ கொடுப்பனவுகளுக்கு அவர்களின் செலுத்துதல் கடமைகளை திறம்பட நிர்வகிக்க இது அவர்களுக்கு உதவுகிறது. மேலும், துவக்கத்திற்கு முந்தைய மற்றும் பிந்தையவற்றிற்கான திட்ட வரவுகளை சமநிலைப்படுத்த புதுமையான தீர்வை பில்டர்களுக்கு வழங்குகிறது.

இந்த ஸ்டேக் ஆனது, டிஜிட்டல் பண சேகரிப்பு, பொறுத்துவிப்பு , உபரி விநியோகம் மற்றும் பாதுகாப்பு சேவைகளுக்கான சேவைகளுடன் ஆர் ஈ ஐ டிகள் மற்றும் ஏ ஐ எஃப் களுக்கு வழங்குகிறது. ஆர் ஈ ஐ டிகள் உயர்நிலை ரியல் எஸ்டேட் சொத்து பிரிவுகளை நிர்வகிக்கின்றன, குத்தகை வருமானம் மூலம் வாடகையை வசூலிக்கின்றன மற்றும் முதலீட்டாளர்களுக்கு உபரியை விநியோகிக்கின்றன. ஏ ஐ எஃப் கள், ரியல் எஸ்டேட் துறையில் தனிப்பட்ட முறையில் திரட்டப்பட்ட நிதிகளை ரியல் எஸ்டேட் துறையில் முதலீடு செய்கின்றன. ஆர் ஈ ஐ டி கள் மற்றும் ஏ ஐ எஃப்கள் இரண்டிற்கும் டிஜிட்டல் முறையில் வலுவான சேகரிப்பு, பொறுத்துவிப்பு மற்றும் உபரி விநியோக சேவைகள் தேவை.

தொடக்க விழாவில் பேசிய ஐசிஐசிஐ வங்கியின் செயல் இயக்குநர் திரு. அனுப் பாக்சி, "நம் நாட்டில் ரியல் எஸ்டேட் துறையானது, இரண்டாவது பெரிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி, பொருளாதாரத்தில் வேகமாக வளர்ந்து வரும் துறைகளில் ஒன்றாக இருக்கிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்த துறையின் பங்களிப்பு 2025 ஆம் ஆண்டில் 7% லிருந்து 13% ஆக உயரும். பில்டர்கள், ஆர் ஈ ஐ டிகள் மற்றும் ஏ ஐ எஃப்கள் போன்ற ரியல் எஸ்டேட் துறையில் முக்கிய பங்கேற்பாளர்கள் இந்த விரிவாக்கத்தில் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்க தயாராக உள்ளனர். எனவே, அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதோடு, அவர்களின் முழு சூழல் அமைப்புக்கும் தீர்வுகளை வழங்குகிற ஒரு வங்கிக் கூட்டாளர் அவர்களுக்கு தேவைப்படுகிறது.

நிதி அணுகல், கட்டுமானம் முதல் சொத்தை குத்தகைக்கு விடுதல் மற்றும் விற்பது வரை டிஜிட்டல் பண சேகரிப்புக்கான தீர்வுகள் மற்றும் அவர்களின் திட்ட காலம் முழுவதும் மொத்தமாக பணம் செலுத்தும் விருப்பங்கள் அத்துடன் அவர்களின் வாடிக்கையாளர்கள், ஊழியர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கான சேவைகள் இந்த பிரிவுக்கு தேவை என்பதை எங்கள் ஆராய்ச்சி காட்டுகிறது. இந்த இந்த நுண்ணறிவுகளை மனதில் கொண்டு, ரியல் எஸ்டேட் துறையில் உள்ள நிறுவனங்களுக்கு ஒரு தொடர்பு முனையை அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இது அவர்கள் தங்கள் தொழிலை இன்னும் திறமையாக மேற்கொள்ள உதவும்" என்றார்.

# ஸ்டார் ஹெல்த், புதிய ஸ்டார் அவுட் பேஷண்ட் கேர் இன்சூரன்ஸ் பாலிசியை அறிமுகப்படுத்துகிறது

சென்னை, டிசம்பர் 01 2022: இந்தியாவின் முதல் தனி ஹெல்த் இன்சூரன்ஸ் நிறுவனமான ஸ்டார் ஹெல்த் அண்ட் அலைட் இன்சூரன்ஸ் கோ. லிமிடெட் ஆனது, சமீபத்தில் புதிய ஸ்டார் அவுட் பேஷண்ட் கேர் இன்சூரன்ஸ் பாலிசியை அறிமுகப்படுத்தியது. இந்த பாலிசியானது, வாடிக்கையாளர்களுக்கு மலிவு விலையில் முழுமையான டிஜிட்டல் உரிமை கோரல் செயலாக்க செயல்முறையுடன் முழுமையான உடல் நலம் மற்றும் ஆரோக்கிய நன்மைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இன்று இந்தியாவில் 60% க்கும் அதிகமான மருத்துவச் செலவுகள், மருத்துவ ஆலோசனைக் கட்டணங்கள், மருந்து பட்டியல்கள் மற்றும் ஆய்வகப் பரிசோதனைகள் ஆகியவை உள்ளடக்கிய, வெளிநோயாளிகளுக்கான செலவுகள் தொடர்பானவையாக இருக்கின்றன. ஆனால் பெரும்பாலான உடல்நலக் காப்பீட்டுத் திட்டங்கள், உள்நோயாளிகள் மருத்துவமனையில் சேர்க்கப்படுவது தொடர்பான செலவினங்களை மட்டுமே குறிப்பிடுகின்றன, வாடிக்கையாளரையும் அவரது குடும்பத்தாரையும் அவர்களின் அன்றாட உடல் நல செலவினங்களுக்காக வெளிப்படுத்தாமல் விட்டுவிடுகின்றன. ஸ்டார் அவுட் பேஷண்ட் கேர் இன்சூரன்ஸ் பாலிசி, உடல்நலக் காப்பீட்டில் இந்த குறையை நிவர்த்தி செய்ய தொடங்கப்பட்டது.

ஸ்டார் அவுட் பேஷண்ட் கேர் இன்சூரன்ஸ் பாலிசி என்பது இந்தியாவில் உள்ள சிறந்த மருத்துவர்கள், கிளினிக்குகள் மற்றும் நோயறிதல் மையங்களுக்கான அணுகலை வழங்குவதன் மூலம் வாடிக்கையாளரின் ஒட்டுமொத்த நல்வாழ்வை இலக்காகக் கொண்ட ஒரு தனித்த காப்பீடு ஆக இருக்கிறது. வாடிக்கையாளர் தனிநபர் அல்லது சுழல் அடிப்படையில் பாலிசியை வாங்கலாம் மற்றும் 6 குடும்ப உறுப்பினர்கள் வரை காப்பீடு செய்யலாம். வயது வந்தோருக்கான குறைந்தபட்ச நுழைவு வயது 18 வயது முதல் 50 வயது வரை மற்றும் சார்ந்திருக்கும் குழந்தைகளுக்கு, 31 நாட்கள் முதல் 25 ஆண்டுகள் வரையாக இருக்கிறது.

ஸ்டார் ஹெல்த் அண்ட் அலைட் இன்சூரன்ஸ் கோ. லிமிடெட் இன் நிர்வாக இயக்குனர் திரு. விகாஸ் ஷர்மா இந்த பாலிசி குறித்து பேசுகையில், “மருத்துவ பணவீக்கம் அனைத்து சிகிச்சைகளின் செலவுகளையும் அதிகரித்துள்ளது. இன்று, வெளிநோயாளி சிகிச்சைக்கான ஆலோசனைக் கட்டணங்கள், மருந்துப் பட்டியல்கள் மற்றும் நோய் கண்டறிதல் சோதனைகள் போன்றவற்றுக்கு கணிசமான செலவு உண்டாகிறது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், ஒரு நபர் இல்லாமல் செய்ய முடியாத அத்தியாவசிய சிகிச்சைகளாக இவை இருக்கின்றன. காலப்போக்கில், இது மக்களுக்கு பெரும் செலவு சுமையை உருவாக்குகிறது. ஸ்டார் அவுட் பேஷண்ட் கேர் இன்சூரன்ஸ் பாலிசியானது, வெளிநோயாளிகளுக்கான செலவுகளுக்கு மிகவும் தேவையான உடல்நல காப்பீட்டை வழங்குவதன் மூலம் சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவினருக்கும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது."என்று கூறினார்.

வாடிக்கையாளர்கள் ரூ. 25,000/- ரூ. 50,000/-, ரூ. 75,000 மற்றும் ரூ. 1,00,000/ ஆகியவற்றை 1 வருட பாலிசி காலத்திற்கு வழங்கும் காப்பீட்டுத் தொகை விருப்பங்களில் ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்யலாம்.

இந்த பாலிசியானது பிளாட்டினம், தங்கம் மற்றும் வெள்ளி திட்டங்களில் முறையே 1,2 & 4 வருடங்கள் காத்திருப்புக்குப்பிறகு, முன்பே இருக்கும் நோய்களையும் உள்ளடக்கும்.

புதுப்பிக்கும் நேரத்தில், வாடிக்கையாளர்கள் இரண்டு தொடர்ச்சியான கோரிக்கை இல்லாத வருடங்களின் ஒவ்வொரு தொகுதிக்குப் பிறகும் பிரீமியத்தில் 25% தள்ளுபடி பெறத் தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

# மெகா பவர் ஸ்டார் ராம் சரண், புச்சி பாபு சனா, வெங்கட சதீஷ் கிலாரு, இணையும் புதிய பான் இந்தியா திரைப்படம் விரைவில்


சென்னை, டிசம்பர் 01 2022: இந்தியா கடந்து உலகை திரும்பி பார்க்க வைத்த பான் இந்தியா திரைப்படம் “ஆர் ஆர் ஆர்” மூலம் மிகப்பெரிய பிளாக்பஸ்டர் வெற்றியைப் பெற்ற மெகா பவர் ஸ்டார் ராம் சரண் தற்போது ஷங்கர் இயக்கத்தில் மற்றொரு பான் இந்திய படத்தில் நடித்து வருகிறார். சரண் நடிக்கும் அடுத்த படம் இன்று அதிகாரப்பூர்வமாக உறுதி செய்யப்பட்டுள்ளது. உப்பெண்ணா படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமாகிய இளம் இயக்குநர் புச்சி பாபு சனா ராம்சரணை இயக்குகிறார். பான் இந்தியா எண்டர்டெயின்ருக்கான அனைத்து தகுதிகளும் கொண்ட அட்டகாசமான திரைக்கதையை இயக்குனர் தயார் செய்துள்ளார்.

முன்னணி தயாரிப்பு நிறுவனமான மைத்ரி மூவி மேக்கர்ஸ் பெருமையுடன் வழங்க, விருத்தி சினிமாஸ் மற்றும் சுகுமார் ரைட்டிங்ஸ் பேனர்களின் கீழ் அதிக பொருட்செலவில் பிரமாண்டமாக உருவாகும் இப்படத்தின் மூலம் வெங்கட சதீஷ் கிலாரு திரைப்பட தயாரிப்பில் பிரமாண்டமாக இறங்குகிறார்.

இப்படத்தின் மற்ற நடிகர்கள் மற்றும் குழுவினர் பற்றிய விவரங்களை படக்குழு விரைவில் அதிகாரப்பூர்வமாக வெளியிடுவார்கள்.

நடிகர்கள்: ராம் சரண்

தொழில்நுட்பக் குழு: எழுத்து, இயக்கம்: புச்சி பாபு சனா




வழங்குபவர்கள்: மைத்ரி மூவி மேக்கர்ஸ் பேனர்: விருத்தி சினிமாஸ், சுகுமார் ரைட்டிங்ஸ் தயாரிப்பாளர்: வெங்கட சதீஷ் கிலாரு.

# திருமலா விரைவு ரெயிலில் சிகரெட் பிடித்துவிட்டு அணைக்காமல் கழிவறையில் வீசி சென்றதால் தீ விபத்து

சென்னை, டிசம்பர் 01 2022: திருப்பதி ரெயில் நிலையத்தில் திருமலா விரைவு ரெயிலில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. ரெயிலில் யாரும் இல்லாததால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.

திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு நாடு முழுவதிலும் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நாள்தோறு வந்து செல்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் பேருந்து, ரெயில் பயணத்தையே பயன்டுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் விசாகப்பட்டினத்தில் இருந்து இன்று காலை திருப்பதி வந்தது திருமலா




விரைவு ரெயில். பயணிகள் அனைவரும் ரெயிலில் இருந்து இறங்கிச் சென்றனர்.

ரெயில் நிலையத்தில் பயணிகள் இன்றி நின்றிருந்த திருமலா ரெயிலில் எஸ்-6 முன்பதிவு பெட்டி திடீரென தீப்பிடித்து எரிந்தது. இந்த தீ மளமளவென மற்ற பெட்டிகளுக்கும் பரவியது. இதனைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த பயணிகள் சத்தமிட்டனர்.

தகவல் அறிந்து விரைந்து வந்த தீயணைப்ப வீரர்கள் எஸ்ஸ் 6 முன்பதிவு பெட்டியின் கழிவறையின் மேல்பகுதியில் பற்றி எரிந்த தீயை அணைத்தனர். இதையடுத்து தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

விபத்து குறித்து ரெயில்வே போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

முதற்கட்ட விசாரணையில், அடையாளம் தெரியாத நபர் சிகரெட் பிடித்துவிட்டு அணைக்காமல் கழிவறையில் வீசி சென்றதால் தீ விபத்து ஏற்பட்டது என்பது தெரியவந்துள்ளது.

பயணிகள் அனைவரும் இறங்கிய பின்னர் ரெயிலில் தீ விபத்து ஏற்பட்டதால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. இந்த தீ விபத்தில் உயிர் சேதம் எதுவும் இல்லை எனவும் தகவல் வெளியாகி உள்ளது.

# பணியாளர்களின் போக்குவரத்துக்கான மின்சார பேருந்துகளை அறிமுகம் செய்ய, சுவிட்ச் மொபிலிட்டி, ஜெ எஸ் டபிள்யூ உடன் கூட்டு சேர்ந்துள்ளது

சென்னை, டிசம்பர் 01 2022: அடுத்த தலைமுறை கார்பன் நியூட்ரல் எலக்ட்ரிக் பஸ் மற்றும் இலகுரக வணிக வாகன நிறுவனமான ஸ்விட்ச் மொபிலிட்டி லிமிடெட் (‘ஸ்விட்ச்’) இந்தியாவில் பணியாளர்களின் போக்குவரத்துக்காக மின்சார பேருந்துகளை அறிமுகப்படுத்த ஜெ எஸ் டபிள்யூ உடன் கூட்டு சேர்ந்துள்ளது. ஊழியர்களின் போக்குவரத்துக்கு, இதுவே நாட்டின் முதல் குறிப்பிடத்தக்க மற்றும் மிகப்பெரிய மின்சார பேருந்து ஆர்டர் ஆகும். இதில் 71 பேருந்துகள் ஜெ எஸ் டபிள்யூ ஸ்டீலுக்கு விஜயநகர் ஆலைக்கு வழங்கப்படுகின்றன. ஸ்விட்ச் மொபிலிட்டி 12 வருட ஒப்பந்த காலத்தில் சார்ஜிங் உள்கட்டமைப்பை சொந்தமாக அமைத்து, மற்றும் தேவையான பராமரிப்பு திறன் உள்ளிட்ட முழு செயல்பாடுகளையும் மேற்பார்வையிடும். ஜெ எஸ் டபிள்யூ குழும நிறுவனங்களின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் சஜ்ஜன் ஜிண்டால் மற்றும் ஸ்விட்ச் மொபிலிட்டி லிமிடெட் இன் குளோபல் சிஈஓ மகேஷ் பாபு ஆகியோர் முதல் தொகுப்பு மின்சார பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.



ஸ்விட்ச் மொபிலிட்டி லிமிடெட் இன் குளோபல் சிஇஓ, மகேஷ் பாபு கூறுகையில், “இந்தியாவில் உள்ள தனியார் பேருந்து சந்தையானது , 70% சந்தைப் பங்கை ஆக்கிரமித்துள்ள நாட்டின் முக்கிய போக்குவரத்துச் சந்தைகளில் ஒன்றாகும், இதில் தனியார் மின்சார பேருந்து சந்தை அடுத்த ஐந்து ஆண்டுகளில் ரூ.60 பில்லியனாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்விட்ச் ஈ ஐ வி12 க்கு கிடைத்த நேர்மறையான வரவேற்புடன், பணியாளர்களின் போக்குவரத்துத் துறையில் நுழைவதில் மற்றும் ஜெ எஸ் டபிள்யூ ஸ்டீல் உடனான நிலையான பயணத்தின் ஒரு பகுதியாக இருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ஜெ எஸ் டபிள்யூ உடனான இந்த கூட்டாண்மையானது, ஸ்விட்ச் மொபிலிட்டிக்கு ஒரு முக்கியமான மைல்கல்லாக உள்ளது, ஏனெனில் நாட்டிலேயே எங்களது முதல் மற்றும் மிகப்பெரிய தனியார் பேருந்து ஆர்டரை நாங்கள் வழங்குகிறோம். எங்கள் ஸ்விட்ச் தயாரிப்புகள் மீது நம்பிக்கை வைத்ததற்காக ஜெ எஸ் டபிள்யூ நிர்வாகத்திற்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நிலையான பயணத்தில் கைகோர்க்க தீவிர ஆர்வம் காட்டும் நாடு முழுவதும் உள்ள பல கார்ப்பரேட் நிறுவனங்களுடன் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்."என்று கூறினார்.

இந்த குளிரூட்டப்பட்ட பேருந்துகளில் சுவிட்ச் ஈ ஐ வி 12 உம் அடங்கும், இது, தற்போதைய மற்றும் எதிர்காலத்திற்கு ஏற்றதாயிருக்கும் அதே வேளையில் தொழில்நுட்பம் மற்றும் ஊழியர்களின் வசதிக்கான, வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட வழங்கல்களையும் கொண்டுள்ளது, ஸ்விட்ச் ஈ ஐ வி 12 ஆனது தனியுரிம, இணைக்கப்பட்ட தொழில்நுட்ப தீர்வுகள், ‘ஸ்விட்ச் ஐ ஓ என், இயக்கும் ரிமோட், நிகழ்நேர கண்டறிதல் மற்றும் கண்காணிப்பு சேவைகள் மற்றும் உலகத் தரம் வாய்ந்த டிஜிட்டல் பேட்டரி மேலாண்மைக் கருவிகளுடன் உட்பொதிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய ஸ்விட்ச் ஈ1 பஸ் மற்றும் ஈ ஐ வி இயங்குதளத்தின் ஈ வி வடிவமைப்பு ஆகியவை ஒரே மாதிரியானவை.

இந்திய சந்தை மற்றும் தட்பவெப்ப நிலைகளுக்காக சிறப்பாக வடிவமைக்கப்பட்ட மேம்பட்ட லித்தியம்-அயன் என் எம் சி வேதியியலுடன் கூடிய புதிய தலைமுறை உயர் திறன் கொண்ட, மாடுலர் பேட்டரிகளும் இந்த பேருந்துகளில் பொருத்தப்பட்டுள்ளன. இந்த மின்சார டிரைவ் ட்ரெய்ன்கள் மற்றும் பேட்டரிகள் நீண்ட பேட்டரி ஆயுளுடன் சிறந்த செயல்திறனை உறுதி செய்வதற்காக சந்தையில் குறைந்த மொத்த உரிமைச் செலவை வழங்கி அளவீடு செய்யப்படுகின்றன, இந்த மின்சார பேருந்துகளின் பயனுள்ள செயல்பாடுகள் மற்றும் சேவைகளை உறுதி செய்வதற்காக, ஸ்விட்ச், அடுத்த ஐந்து ஆண்டுகளில் மனிதவளத்தை 30% அதிகரிக்கும் அதன் வளர்ச்சி திட்டங்களுக்கு ஏற்ப. அதன் குழுவை விரிவுபடுத்தி 200 பணியாளர்களை பணியமர்த்துகிறது.

# 100 இசைக் கலைஞர்கள் மற்றும் பாடகர்களுடன் இணைந்து வதந்தி வலைத்தொடருக்காக இயக்குனர் ஆண்ட்ரூ லூயிஸ¬டன் இணைந்து சைமன் கே கிங் இசை

சென்னை, டிசம்பர் 01 2022: உலகமெங்குமுள்ள 100 இசைக் கலைஞர்கள் மற்றும் பாடகர்களுடன் இணைந்து வதந்தி வலைத்தொடருக்கு இசையமைத்த சைமன் கே கிங்*

"கொலைகாரன்" மற்றும் "கபடதாரி" திரைப்படத்தின் இசையமைப்பாளர் சைமன் கே கிங், அமேசான் பிரைம் த்ரில்லர் தொடரான " *வதந்தி* "க்காக மீண்டும் *கொலைகாரன்* திரைப்பட இயக்குனர் ஆண்ட்ரூ லூயிஸுடன் இணைந்துள்ளார்.



சைமன் கே கிங் ஹங்கேரியில் உள்ள புடாபெஸ்டில் *வதந்தி* வலைத்தொடரின் பின்னணி இசை மற்றும் டைட்டில் ட்ராக்கை பதிவு செய்தார். இதற்காக, 100 இசைக் கலைஞர்கள் மற்றும் பாடகர்களுடன் இணைந்து வதந்தியின் முழு ஒலிப்பதிவுக்கும் இசையமைத்துள்ளார். வதந்தி, வலைத் தொடருக்காக பிரத்தியேகமாக ஒரு வகையான டைட்டில் ட்ராக் இயற்றியுள்ளார். இந்தப் பாடலின் வரிகளை எழுதிய பாடலாசிரியர் கு கார்த்திக், பண்டைய தமிழ் இலக்கிய உரையைப் பயன்படுத்தியுள்ளார். மேலும் 40 உறுப்பினர்களைக் கொண்ட இந்தியாவைச் சேர்ந்த பாடகர் குழு டைட்டில் ட்ராக்கை வழங்கியுள்ளது.

உலகெங்கிலும் உள்ள பல குறிப்பிடத்தக்க தொழில்நுட்ப வல்லுநர்களும் இதற்கு பங்களித்துள்ளனர், மேலும் இந்த ஆண்டின் தொடக்கத்தில் "பேப்பர் ராக்கெட்" எனும் தனது வெற்றிகரமான பணிக்குப் பிறகு, சைமன் கே கிங் *வதந்தி* யில் தனது அற்புதமான இசையைப் பகிர்ந்து கொள்வதை மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் கருதுகிறார்.